# தொண்டமான் கலாசார நிலைய அழகியற் கல்லூரி பகுதி நேர வளவாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

**சௌ**மியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் தொண்டமான் கலாசார நிலையம் அழகியற் கல்லூரியின் கீழ் வரும் முறைசாரா கற்கை நெறிக்காக பகுதிநேர வளவாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு முன்னெடுக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளாவன கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், கும்மியாட்டம், கோலாட்டம், ஒயிலாட்டம், காவடி, கரகாட்டம், கூத்துக்கலை (காமன்கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர்) கோலக்கலை, நாதஸ்வரம், உறுமி, மேளம், மிருதங்கம்,வயலின், வீணை, தப்பு, உடுக்கை, பொம்மலாட்டம், பொய்கால் குதிரை ஆட்டம்,தெருக்கூத்து, 9. மேடைப் பேச்சு, பட்டிமன்ற பேச்சு, கவிதை, சிறுகதை, நாவல், ஓவியப்பயிற்சி, வானொலி மற்றும் மேடை அறிவிப்பாளர் பயிற்சி, ஆவணப்படங்கள் மற்றும் குறுந்திரைப்பட பயிற்சி

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி,

செயற்றிட்ட முகாமையாளர்

பகுதி நேர வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல், தொண்டமான் கலாசாரநிலையம் அழகியற் கல்லூரி தவலந்தன்ன,கொத்மலை.

தொடர்பு இலக்கங்கள் 0522259934, 0522259866

# தமிழ் முற்போக்கு கூட்டணியின் அமோக வெற்றிக்கு பாடுபட்ட அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்

## தொ.தே.சங்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் டாக்டர் நந்தகுமார்

( பானா. தங்கம் )

**த**மிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஆறு வேட்பாளர்களும் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைத்த அனைவருக்கும் பாராட்டுதல்களோடு நன்றி தெரிவிப்பதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் டாக்டர் அழகமுத்து நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தமது அறிக்கையில்,தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் கொழும்பு, கண்டி, நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி முதலான மாவட்டங்களில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருந்தார்கள். நுவரெலியா மாவட்டத்தில் மூன்று பேரும், கண்டி, கொழும்பு, பதுளை மாவட்டங்களில் தலா ஒரு வேட்பாளருமாக மொத்தம் 6 பேர் வெற்றி பெற்றுள்ளார்கள். இவர்களில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மூன்று உறுப்பினர்களை வெற்றி கொண்டது இம்முறையும் மூன்று உறுப்பினர்களைப் பெற்றுள்ளமை இங்குள்ள மக்கள் தமிழ் முற்போக்கு கூட்டணி மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் மக்களுக்கு செய்துள்ள சேவைகளுக்கு அளித்துள்ள அங்கீகாரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.பிரசார நடவடிக்கைகளுடன் தேர்தல் பணிகளை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தொழிலாளர் தேசிய சங்கத்தின் முழுநேர உத்தியோகத்தர்கள், தேசிய அமைப்பாளர், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், தோட்டக் கமிட்டித் தலைவர்கள், இளைஞர் மற்றும் மகளிர் அணியினருக்கும் விஷேட நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

# பண்டாரவளை மாநகர சபையினரின் சுகாதார முன்னெடுப்புகள் திருப்திகரமானதாக இல்லை

## மக்கள் விசனம்

(தியத்தலாவை நிருபர்)

**ப**ண்டாரவளை மாநகர சபையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுகாதார நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை என பிரதேச மக்களும் நகர வர்த்தகர்களும் அதிருப்தியும் விசனமும் தெரிவிக்கின்றனர். இலங்கையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளை கவர்ந்த சீதோசண கால நிலை கொண்ட பிரதேசமாக பண்டாரவளை நகர் விளங்குகின்றது.

நகரில் அமைந்துள்ள பஸ் நிலையம், வாடகை வாகன தரிப்பிடங்கள் ஐக்கிய வர்த்தக தொகுதி,மற்றும் பிரதான வர்த்தக தொகுதி போன்றவற்றில் அமைந்துள்ள மலசல கூடங்கள், உள்ளக கட்டமைப்புக்கள் ஆங்காங்கு உடைந்தும் சிதைந்தும் காணப்படுவதால் தினந்தோறும் இங்கு வருகை தரும் மக்கள் சிரமங்களை மேற்கொள்வதாக அதிருப்தி தெரிவிக்கின்றனர். இது தவிர நகரின் மத்தியில் அமைந்துள்ள வாடகை வேன்கள் நிறுத்தப்படும் இடத்திலும் பஸ் நிலையத்திலும் அமைந்துள்ள மலசல கூடங்களில் வடியும் கழிவு நீரினை பிரதான வீதியின் வடிகானுக்குத் திருப்பியுள்ளதால் அது நிரம்பி வழிந்து நகரெங்கும் துர்நாற்றம் வீசுவதாக விசனம் தெரிவிக்கும் நகரவாசிகள் கோடிக் கணக்கில் வருவாயினை பெறும் இந்த மாநகர சபையினால் ஏன் சுகாதார நடவடிக்கையினை முன்னெடுக்க முடியாதுள்ளது என கேள்வியெழுப்புகின்றனர்.


11 ஆம் பக்கத் தொடர்ச்சி

எவ்வாறாயினும் உங்கள் சுய பெறுமதி மற்றும் சுய கௌரவத்தை முன்னிறுத்துவது முக்கியமானதாக அமைகின்றது. அவ்வாறான மேற்கொள்ளப்பட்ட தவறான முயற்சிகளுக்கு உங்களை குற்றம் சாட்டுவது அவசியமில்லை என்பதை எப்போதும் நினைவூட்டுங்கள். அவ்வாறான உணர்வுகளை ஏற்படுத்தும் மூலக்காரணிகளை இனங்கண்டு குற்றமிழைப்பவர் அல்லது அப்பகுதிக்குச் செல்வதைத் தவிர்ப்பது உங்கள் கவலை மற்றும் அச்சத்தைப் போக்குவதற்குப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குவது, ஏனைய குழுக்களின் உதவிகளை நாடுவது தியானம் மற்றும் இளைப்பாறல் நுட்பங்களை பின்பற்றல் போன்றவற்றை தொடரலாம்.

துஷ்பிரயோகத்தின் மூல காரணியாக அதிகாரம் காணப்படுகின்றது. எனினும் சரியான மூலங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவிலும் சக்தி காணப்படுகின்றது. பெண் குழுக்கள், அடிமட்ட செயற்பாட்டாளர்கள் அல்லது நெருக்கமான நம்பிக்கைக்குரியவர் வலுவூட்டி, துஷ்பிரயோகத்துக்கு எதிராக செயலாற்ற தேவையான வலிமையை வழங்கக்கூடும். பல நிலைமைகளில் குடும்பம் அல்லது சமூக மட்டத்திலிருந்து கிடைக்கும் ஒற்றுமைத்தன்மை மற்றும் இரகசியம் பேணக்கூடிய தன்மையிலான சூழ்நிலை என்பது திருப்பு முனையாக அமையலாம். "நபர் ஒருவரின் தொழிலை புரிவது மற்றும் சேவைகளை வழங்குவது என்பது, அதற்குப் பதிலாக பாலியல் ரீதியான சலுகைகளை கோரும் உரிமை எனப் பொருள்படாது" என திவ்யா குறிப்பிட்டார். நடந்த சம்பவத்தை திரும்பிப் பார்க்கையில் உள்ளுணர்வுகளில் நான் நம்பிக்கை கொண்டிருந்தால் வங்கி முகாமையாளரை எதிர்த்திருக்கக்கூடும் என்றார். கடனைப் பெற்றுக் கொள்வதற்கு தாம் சட்டபூர்வமான தகைமையைக் கொண்டிருப்பதை அவர் புரிந்திருந்தால், மற்றும் முக்கியமாக முகாமையாளரின் அநாவசியமான இச்சை கோரல்களை எதிர்ப்பதற்கு அவசியமான வலுவூட்டலை அவர் பெற்றிருந்தால், அவரின் சூழ்நிலையில் அவரை நிராதரவாக மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவராக உணரச் செய்திருக்காது. இனிவரும் காலங்களில் எழக்கூடிய எந்தவொரு அசௌகரியமான சூழ்நிலைக்கும் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதற்கு தாம் படிப்பினையைப் பெற்றுள்ளதாகவும் இவ்வாறான அநீதியை எதிர்கொள்ளும் எந்தவொரு பெண்ணுக்கும் அதிலிருந்து விடுபடுவதற்கு அவசியமான உதவிகளை வழங்கவும் தம்மால் முடியும் என மீளச்சிந்தித்துப் பார்க்கையில் திவ்யா குறிப்பிட்டார்.



# பாலியல் இலஞ்சத்தை மறுத்தல்



**மூ**ன்று பிள்ளைகளின் தாயாரான 31 வயது நிரம்பிய திவ்யா (உண்மைப் பெயர் மாற்றப்பட்டுள்ளது) அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக அரச வங்கியின் கிளை ஒன்றுக்கு விஜயம் செய்திருந்தார். அங்கிருந்து அவர் மீண்டும் வீடு திரும்பும் போது குறித்த வங்கி முகாமையாளருடன் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பான சிந்தனையில் மூழ்கியிருந்தார். அவரின் கோரிக்கை எவ்வாறு நிராகரிக்கப்பட்டது,அந்த முகாமையாளரின் கரம் எவ்வாறு அவரின் கரத்தைச் சுற்றியிருந்தது, இழிவான நிபந்தனையுடன் முற்றிலும் நிராதரவான நிலைக்கு திவ்யாவை தள்ளி அந்தக் கடனை வழங்கினார் என்பதைப் பற்றி சங்கடத்துடன் சிந்தித்தார்.

இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வசிக்கும் பெண் குடும்பத் தலைவர்கள் எதிர்கொள்ளும் பாலியல் இலஞ்சம் தொடர்பான சம்பவங்களில் ஒரு உதாரணமாக திவ்யாவின் இந்த நிலை அமைந்துள்ளது. பாலியல் இலஞ்சம் என்பது பரீட்சியமற்ற சொற்பதமாக அமைந்திருந்த போதிலும் உள்நாட்டிலும் சர்வதேச நாடுகளிலும் பரவலாக நிலவும் ஒரு சூழ்நிலையாக அமைந்திருப்பதாக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ((Centre for Equality and Justice) ஸ்தாபகரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சியாமளா கோமஸ் குறிப்பிட்டார்.

2016 ஆம் ஆண்டில் இந்த விடயம் தொடர்பில் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் முதன் முறையாக முன்னெடுக்கப்பட்ட போது பதவியிலுள்ள நபர்களால் சேவையை வழங்க அல்லது வசதியை ஏற்படுத்திக் கொடுக்க பாலியல் ரீதியால் கண்டிப்பாக கோரப்படும் ஒரு "தவறான அனுகூலம்" ("Improper Benefit") என வரைவிலக்கணப்படுத்தியிருந்தனர். இலங்கையின் சட்டக் கோவைக் கட்டமைப்பில் இந்த விடயம் தொடர்பில் வெளிப்படையான சட்ட வரைவிலக்கணம் இல்லாத நிலையில் (1965 ஆம் ஆண்டின் இல. 2) இலஞ்ச சட்டத்தின் கீழ் உள்வாங்கப் படுவதுடன் இதில் தற்போது சில திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன.

"ஆண் ஒருவரை தனது எல்லைக்குள் வைத்திருக்க ஒரு பெண் அறிந்திருக்க வேண்டும்.

அந்த ஆணை இந்தப் பெண் தான் தூண்டியிருக்கக்கூடும்" என்பது பலர் இதுவரை கூறும் பொதுவான பதிலாகும். கணவனை இழந்தப் பெண்கள் மற்றும் தனித்து வாழும் பெண்கள் மீது அடக்கு முறையான மற்றும் உயர் ஒழுக்கமுறைசார் எதிர்பார்ப்புகளை உருவாக்குவதாக சமூக முறைகள் காணப்படக்கூடும் என்பதால் சேவை ஒன்றுக்காக அவர்களிடம் பாலியல் இலஞ்சத்தை வழங்க உடந்தையானவர்களாக இருப்பார்கள் எனும் தோற்றப்பாட்டை உருவாக்குகின்றது. பல தாய்மார் தமக்கு நேரும் இந்த துஷ்பிரயோகங்கள் தமது பிள்ளைகளையும் பாதித்துவிடக்கூடும் என்ற அச்ச உணர்வையும்கொண்டிருப்பார்கள்.

அதிகம் பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ள நபரை தன்னிச்சைக்குட்படுத்த அல்லது துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயல்வது என்பது, குற்றமிழைப்பவரின் கோழைத்தனத்தை பிரதிபலிக்கின்றது. தம்முடைய உரிமைகள் தொடர்பான அறிவைக் கொண்டிருப்பது மற்றும் நம்பிக்கையுடன் நபர் ஒருவரின் அவ்வுரிமைகளைத் தொடர்பாடல் செய்வதனூடாக இவ்வாறான முயற்சிகளைத் தவிர்க்கலாம்.

தம்முடைய கோரிக்கை அல்லது தேவையானது சட்டத்துக்குட்பட்டதாகவும் அதிகாரி ஒருவரின் உத்தியோகபூர்வ பொறுப்புகளின் அடிப்படையில் அமைந்திருப்பதையும் உறுதியுடன் வலியுறுத்துவது முக்கியமானதாகும். எனவே அதிகாரியின் சொற்கள்,செயற்பாடுகள் அச்சுறுத்துவதாக அல்லது வற்புறுத்துவதாக அமைந்திருப்பது சட்டவிரோதமானதாகும். நிலையான கண் பார்வைத் தொடர்பு தோற்ற உளவமைதி நிலை மற்றும் அமைதி காப்பது போன்றன தன்நம்பிக்கை மற்றும் சுய மதிப்பையும் வெளிப்படுத்தும்.

சகல குற்றமிழைப்பவர்களையும் பாதுகாப்பாக எதிர்கொள்ள முடியாது என்பதால் தம்முடைய சூழமைவு மற்றும் குற்றமிழைப்பவரின் செயற்பாடுகள் தொடர்பில் விழிப்புடன் இருப்பது முக்கியமானதாகும். குற்றமிழைத்தவரின் நடவடிக்கைகள், தொனி, தோற்றப்பாடு, போதையிலுள்ளாரா போன்றன ஆக்கிரமிப்பு அல்லது வன்முறைக்கான அவர்களின் நோக்கம்,நாட்டம் ஆகியவற்றை வெளிப்படுத்துவதுடன் அவர்களுடன் ஈடுபடுவது பாதுகாப்பானதா இல்லையா என்பதை உணர்த்தக்கூடியதாக அமைந்திருக்கும். குறிப்பாக இச்சம்பவமானது தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் பரீட்சியமில்லாத இடம் அல்லது மூடப்பட்ட அறைகளினுள் இடம்பெறுமாயின் அவற்றிலிருந்து வெளியேறுவது தொடர்பான தந்திரோபாயங்களை எச்சரிக்கையாக அறிந்திருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரியின் மீது தங்கியிருக்க வேண்டிய நிலை காரணமாக இவ்வாறான கோரிக்கைகள் தலைவணங்க வேண்டியுள்ளது.

குறித்த முகாமையாளர் தம்மீது அனுதாபம் கொள்ள முயற்சித்தமையை திவ்யா நினைவுபடுத்தினார். தான் அசௌகரியமான உணர்ந்த போதிலும் "அவர் மிகவும் உதவியானவர் அவரின் பலவீனத்தை நான் புறக்கணிக்க வேண்டுமென நினைக்கின்றேன்." என திவ்யா அந்நேரத்தில் எண்ணினார். துஷ்பிரயோகத்தை எதிர்ப்பதை விட அனுசரித்துச் செல்வது என்பது குறைந்தளவு அவலமானதாகும். குறிப்பாக குற்றமிழைப்பவர் இரக்கம், பரிவு மற்றும் பெண்ணின் நம்பிக்கையை கவர முயற்சிகளை வெளிப்படுத்துவாராயின், நீண்ட காலமாக இடம்பெறும் துஷ்பிரயோகத்தை, நியாயப்படுத்துவதற்கு பெண்களை தூண்டுவதாக அமைந்திருக்கும்.

அவ்வாறான அனுபவத்தின் பின்னர் குற்ற உணர்வு, அச்சம்,வெட்கம் மற்றும் தன்னைத் தானே குற்றம் சாட்டுவது போன்ற உணர்வுகள் பொதுவானதாக அமைந்திருக்கும்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம் பார்க்க